அரசிடமிருந்து வாங்குவதற்கு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். கட்டுமானப் பணியின் மதிப்பு அதிகரித்துள்ளதால், கூடுதல் நிதியை கயிறு வாரியத்திடமிருந்து தமிழக அரசு கோரியிருக்கிறது. இன்னும் அந்த நிதி நமக்குக் கிடைக்கவில்லை. மற்றும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும், சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில், அங்கத்தினர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம், சமுதாயக் கூடம் கட்டுகிற திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவது, சேமிப்புக் கிடங்கு கட்டுவது, நவீனக் கழிப்பறை போன்ற திட்டங்களுக்கு, ஒவ்வொரு சொசைட்டிக்கும் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கயிறு தொழில் முக்கியமான ஒரு தொழிலாக இருக்கிறது. குறிப்பாக, பெண்கள் இதில் அதிகமாக ஈடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொல்லங்கோடு, தாமரைக்குளம் ஆகிய இரண்டு இடங்களை மாதிரி கிராம காயர் திட்டத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுபோல கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இன்னும் பல கிராமங்களை மாதிரி காயர் கிராமத் திட்டத்தில் சேர்த்து பயனடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 407, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 408, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 27]

408—

காட்டுமன்னார்கோயில் தொகுதி, லால்பேட்டையில் நிலக்கரிப் படிவத்தைக் கண்டுபிடித்தல்.

***20225—திரு. என். ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, லால்பேட்டை கிராமத்தில் பூமிக்கடியில் நிலக்கரி உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், லால்பேட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 120 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஏறத்தாழ 1,300 மில்லியன் டன் அளவு பழுப்பு நிலக்கரி உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மையமாக உருவாகிவரும் தமிழகத்தில் காட்டுமன்னார் கோயில், லால்பேட்டையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலக்கரியை வெட்டி எடுத்து தொழில் தொடங்கத் திட்டம் ஏதேனும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நிலக்கரி உள்ளது என்பதை மத்திய அரசாங்கத்தினுடைய புவியியல் துறை ஆய்ந்து கொண்டிருக்கிற காரணத்தாலும், இன்னும் அந்த ஆய்வு முடியாது இருக்கிற காரணத்தாலும், இந்த நிலையில் எதுவும் சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வு முடிவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு விரைவில் முடியும் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. முடிந்த பிறகு தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சிவசுப்பிரமணியன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தொழில் துறையிலே தமிழகம் முந்தியிருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். அதனுடைய ஒரு கட்டமாக நெய்வேலி சீரோ யூனிட் திட்டம் ஆயிரம் கோடி ரூபாயிலே ஒரு வெளிநாட்டு இந்தியருக்காக கொடுக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகளைத் தொடங்க ஏற்பாடு செய்த நேரத்தில், அது நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு நிலுவைவில் உள்ளது. இன்றைக்கு முதலாவது சுரங்கத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஆளுநர் உரையிலேயும் எடுத்துச் சொல்லியிருந்தாலும், இன்றைக்கு மத்திய அரசினர் கேளாச் செவியுடையவராய் இருந்து வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களின் அருமைத் தம்பியாகவும், செயல்திறன் மிக்கவராகவும் இருக்கிற நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று வந்திருக்கிறார்கள். இப்படி வெளியே இருக்கிற யாரிடமாவது காட்டுமன்னார்கோயில், லால்பேட்டையிலே 1,300 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி இருக்கின்றது. உடனடியாக இத்திட்டத்தைச் செயல்படுத்திட தனியார் ஒருவரிடம் ஒப்படைத்திட நமது அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கல்யாணமே ஆகவில்லை, அதற்குள் உறுப்பினர் அவர்கள் குழந்தைக்குப் பெயர் வைக்க முயற்சிக்கின்றார். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில், லால்பேட்டையைத் தவிர, தமிழ் நாட்டில் வேறு பகுதிகளில், வேறு மாவட்டங்களில், நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதா? அமைச்சர் அவர்களுக்கு விவரம் தெரியும் என்றால் வேறு மாவட்டங்களில் எங்கெங்கு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி அங்கே ஒரு மின் திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். அடுத்து காட்டுமன்னார்கோயில் பகுதியிலே இதுபோன்ற பழுப்பு நிலக்கரி கிடைப்பதாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார்கோயில், லால்பேட்டை பகுதியில் இத்தகைய நிலக்கரி கிடைக்கிறது. இதைத் தவிர, வேறு எங்காவது கிடைக்கிறதா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

2. அறிவிப்பு

அவை நடவடிக்கைகளைக் காண வந்திருக்கும் ஓரிசா மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு.

HON. SPEAKER: An announcement to the House. I am highly privileged to inform the Hon. Members that the Hon. Speaker of the Orissa Legislative Assembly Thiru Yudhishthir Das is now witnessing the proceedings of our House from the Speaker`s Gallery. (Thumping of desks) On behalf of our Hon. Chief Minister and on behalf of all the Hon. Members and on my own behalf, I whole-heartedly welcome him to our august House. (Thumping of desks).

மாண்புமிகு ஓரிசா மாநில சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. யுதிஷ்டிர் தாஸ் அவர்கள் தற்போது நம்முடைய பேரவை நடவடிக்கைகளை பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியை மெத்த மனமகிழ்ச்சியோடு பேரவைக்கு அறிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலேயும், மாண்புமிகு அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும், என் சார்பிலேயும் அவரை மனதார நம்முடைய சிறப்புப் பொருந்திய இந்தப் பேரவைக்கு வருக, வருக என்று வரவேற்கிறேன்.

முற்பகல் 10-35

1. வினாக்கள்-விடைகள் - தொடர்ச்சி.

உடுக்குறியிட்ட வினாக்கள் - தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 409, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.